INAUGURAL SESSION

Verified RealEstate™

Seminar on Waterways in Chennai
Inaugural Session

Welcome Address
by

Thiru Vikram Kapur IAS,
Member-Secretary,
Chennai Metropolitan Development Authority

Verified RealEstate™

Hon'ble Minister for Information and Chairman, CMDA,
Respected Additional Chief Secretary and Vice-Chairperson/CMDA,
Senior officers of the Government,
Public representatives,
Officials from various departments,
Representatives from the Universities, Institutions, NGOs and Media,
Ladies and gentlemen.

2. It gives me immense pleasure to welcome the Chief Guest on this occasion Thiru Parithi Ellamvazhuthi, Hon'ble Minister for Information and Chairman, CMDA to this Seminar on waterways in Chennai.

3. The city of Chennai is a coastal metropolis whose water bodies are an integral part of its landscape. The history and culture of the city are interwoven with the fortunes of its rivers and lakes. However, with the growth of urbanization, despite the best efforts of the Government and its citizens, these precious water bodies have been facing onslaughts in the nature of encroachments and pollution.

4. The Second Master Plan of Chennai, which was released in the year 2008, has brought the issue of environmental sustainability to the forefront and delineated specific strategies for preserving our water resources and restoration of the ecological balance. Under the visionary leadership of the Hon'ble Chief Minister of Tamil Nadu, resolute measures have been taken by the Government to implement these strategies, in close cooperation with academicians, NGOs and civil society. The Adyar Poonga Project, which seeks the eco-restoration of the Adyar estuary, is a prime example of this conservation effort and I have been privileged to be personally associated with that work in the recent past. The focus has now expanded to the eco restoration of the Coovum river as well as other waterways in the city for which the Hon'ble Deputy Chief Minister is leading a massive multi-disciplinary project & personally monitoring the same on a weekly basis. Similarly, efforts have been made in the past, including the Chennai City River Conservation Project though with to address the problem of pollution that is threatening the very existence of our waterways.

5. The CMDA, under the directions of the Hon'ble Minister for Information has been closely coordinating the strategies that are aimed at attaining the master plan goals, particularly those dealing with environment, drainage and flood mitigation. It has decided to specifically concentrate attention on Chennai's waterways and, therefore, this Seminar has been organized to bring together all stake holders to take stock of the situation, share their experiences and prepare an implementable plan of action. We are indeed privileged to have the Chairman, CMDA to be with us today & tomorrow and needless to say his presence is a source of inspiration to all of us. I, once again, welcome you Sir, to this Seminar.

6. The Additional Chief Secretary & Chairperson, Tmt. Susan Mathew I.A.S., has been the brain behind this Seminar. I am happy that we have been able to fulfill her long cherished desire of organizing this convention of experts from various agencies, institutions and the civil society to discuss such an important issue concerning Chennai. I welcome you, Madam, on this occasion, and wish to thank you for having agreed to summarize the recommendations of this event during the valedictory session tomorrow.

7. My greetings also go out to the various departments, local bodies and agencies of the Govt. who have deputed their officers for the Seminar as well as to all institutions, NGOs and the members of public who have agreed to participate in the deliberations. A special welcome is also due to those among you who have come from outside the city, particularly from other states, to share their experience in the restoration of water bodies. A special word of gratitude to the media who have gathered here in large numbers to cover the proceedings and carry forward the messages emanating from this gathering to the general public. I welcome one and all to the Seminar.

Thank you.

******

Verified @ RealEstate™

Seminar on Waterways in Chennai
Inaugural Session

Presidential Address

by

Tmt. Susan Mathew IAS,
Additional Chief Secretary & Vice Chairperson,
Chennai Metropolitan Development Authority.

Hon'ble Minister for Information and Chairman, CMDA,
Member-Secretary, CMDA,
Chief Executive Officer, CMDA,
Chief Planner, CMDA
Distinguished delegates,
Senior Officers of the Government,
Colleagues,
Ladies and Gentlemen.

History shows that civilization occurred along the river sides Estuaries were the preferred sites for settlements which is evidenced by geographical location of cities in various parts of the world. The Chennai Metropolitan Area has grown from a tiny village called 'Madras Pattinam' located near the mouth of Cooum River.

2. Chennai Metropolitan Area (CMA) is traversed by 3 rivers viz., Kosathaliyar River, Cooum River and Adyar River. All these 3 rivers have their origin outside the metropolitan area. Flow in these rivers in CMA is restricted to a few days during monsoon because of diversions through anicuts and reservoirs, for storage of water in the upper reaches for the purposes of irrigation and potable water supply to Chennai City.

3. Rivers have multi functions. In a metropolitan area like ours, rivers are primarily flood carriers during the monsoon seasons. Rivers are an integral part of the natural drainage system. It is seen from history that this part of the country had a hierarchy as well as a net work of lakes well connected by drains, channels and canals, flow discharging into the rivers, that finally entered the sea, serving the needs of the people for irrigation, water supply, cattle breeding, influencing the weather pattern and so on.

4. River margins and margins of other water bodies have become areas attracting encroachments by slum dwellers and by various business activities, thus grossly reducing the capacity of these water bodies. The adverse effects of these encroachments were felt in the

Verified RealEstate™

recent years during monsoon floods including vandalism by encroachers who broke tank-bunds to avoid flooding of the encroached areas. It is also found that some of the water spread areas were originally Government lands which have become Patta lands over the years. In the absence of adequate flow in these rivers, the discharge of effluents results in the pollution of waterways affecting the people who live on the banks.

5. Considering the importance of macro and micro drainage system in metropolitan development, due consideration has been given while preparing the SMP for CMA. Some valuable studies have been conducted over the years. They include those by (i) the nucleus Cell of CMDA in 1980, (ii) the Madras Metro Flood relief, Storm water drainage Master Plan Study in 1992-1993carried out jointly by CMDA with PWD, Metro-water and Chennai Corporation engaging the Consultants, M/s. Mott Mac Donald, International U.K, (iii) Storm water drainage master plan in the Chennai City carried out by the same Consultant in 1994, (iv) Environment impact evaluation for the drainage schemes and re-development around Pallikkaranai area through Consultants M/s. K.B.N. Engineering and Applied Sciences Inc., U.K., and (v) Review carried out by the National Environmental Engineering Research Institute (NEERI), Nagpur. Assessing the problems and potential highlighted by these studies and also based on the discussions with the concerned agencies, viz., PWD and Chennai Corporation, the recommendations in this sector have been arrived at and incorporated in the SMP.

6. In the SMP's land use maps, all the water bodies have been zoned specifically, in order to protect the water bodies from encroachments and further conversions.

7. The SMP has identified the principal stakeholder for managing the macro drainage system as the PWD with the Chennai Corporation and the CMWSSB sharing some of the responsibility. The Revenue department is also an important stakeholder as it is in charge of the lands covered by waterways and reservoirs. The micro drainage – storm water drainage system is the responsibility of the Municipal Corporation, Municipalities and other Local Bodies.

8. The SMP recommends certain major policies, strategies, and the plan of action. It recommends:-

Verified RealEstate ™

- Conversion of the present constraints in disposal of flood waters as an opportunity to manage and use the excess water for augmenting urban water supply through creation of additional storage capacity.
- The PWD needs to be made the nodal agency for holistic planning and maintenance of existing water bodies by preventing encroachments and implementation of macro drainage systems.
- Micro drainage would be the responsibility of the local bodies and they would need to be fully and effectively integrated with the macro system.
- The CMDA's land use plan identifies all the important macro drainage features and prescribes the extent to which the conservation area extends. The lakes and water bodies need to be protected from encroachments and existing encroachments should be removed bringing the water bodies to their original state.
- The land use plan identifies the critical areas subject to annual flooding for taking up remedial measures by local bodies in collaboration with the PWD.
- The Plan recommends implementation of measures recommended in the MMFR/SWD Master Plan Study Report.
- For each local body, a micro drainage plan can be prepared by the local body concerned in consultation with PWD
- Pollution levels should be reduced to acceptable standards in the waterways of Chennai in the next five years and establish a system to improve the quality of waterways to desirable standards progressively
- The local bodies concerned should identify lands for development as open spaces and initiate and complete action for acquisition/alienation and provide these facilities. For acquisition of lands for parks / playgrounds and development of new facilities, project proposals can be prepared by the local bodies concerned and financial assistance availed from the OSR Fund

11. As a follow-up action on the SMP, Committees have been formed in CMDA. Infrastructure Committee deals with the Macro and Micro drainage aspects, of CMA.

12. The main purpose of this Seminar on "Waterways in Chennai", inviting experts in the field not only from our State but also from other Cities, is to share the experiences of

Verified RealEstate TM

implementation of projects to improve drainage system in the Cities, to achieve the objectives of improving the livability of people in general and to arrive at specific recommendations to proceed further on improving the macro and micro drainage infrastructure in this metropolitan area, so as to plan for specific projects so that the by the concerned departments and agencies may implement them.

******

Verified RealEstate ™

சென்னை நீர் வழிகள் – கருத்தரங்கம் தொடக்கவிழா
தொடக்கவுரை

திரு பரிதி இளம்வழுதி,
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் மற்றும்
தலைவர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் இன்றும் நாளையும் நடைபெறுகின்ற “சென்னை நீர் வழிகள்” குறித்த கருத்தரங்கின் தொடக்க விழாவுக்குத் தலைமை ஏற்றுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத்தலைவர் திருமதி. சூசன் மாத்யூ அவர்களே, சிறப்புரை ஆற்றவுள்ள வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறையின் செயலாளர் திரு அசோக் டோங்ரே அவர்களே, வரவேற்புரை ஆற்றிய உறுப்பினர் செயலர் திரு விக்ரம் கபூர் அவர்களே, இருநாள் கருத்தரங்கிலும் செரிவான கருத்துகளை வழங்க வருகை தந்துள்ள நிபுணர்களே, அரசு உயர் அலுவலர்களே, தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த பெருமக்களே, துறை சார்ந்த பேராசிரியர் பெருமக்களே, பத்திரிகை மற்றும் தொலைகாட்சி நண்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. சென்னை மாநகரின் நீர்வழிகள் குறித்த கருத்தரங்கைத் தொடங்கி வைப்பதில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைவர் என்ற முறையில் மட்டுமல்லாமல், சென்னையில் பிறந்தவன் என்ற நிலையிலும் நான் பொருத்தமானவன் என்று கருதுகிறேன்.

3. சென்னை மண்ணில் பிறந்த இசைவடிவமான “கானா” என்னும் இசையில் ஒரு பாடல் உண்டு. அது எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. “சென்னை மாநகரம்; சிறப்பான நகரம்; கூவத்துல குளிச்சோம்; அடையாத்துல துணி துவைச்சோம்; பக்கிங்காம்ல படகு விட்டோம் – அது ஒரு காலம், இப்ப எல்லாமே மாறிப்போச்சு இரு ஒரு காலம்” – என்று கானா பாடகர்கள் பாடுவார்கள்.

4. நூறாண்டுகளுக்கு முன் அழகிய ஆறுகளால் சூழ்ந்திருந்த சென்னை மாநகர் இன்றைக்கு பெரும் வளர்ச்சி கண்ட மாநகரமாக உருவெடுத்துள்ளது. உலகில் கவனத்தைப் பெறும் முக்கிய நகரங்களில் ஒன்றாக சென்னை உருவாகியிருக்கிற சூழ்நிலையில், அதன் பழைய தன்மையை இழந்திருப்பது தவிர்க்க இயலாத ஒன்றுதான் என்று கருதவேண்டியிருக்கிறது. ஆனாலும், சென்னை மாநகரை தூய்மையான, சுகாதாரமான, சுற்றுச்சூழல் பாதுக்காப்போடு பசுமை சூழ்ந்த நிலையில் மீண்டும் உருவாக்க மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. ஒரு அரசியல் இயக்கமாக மட்டுமல்லாமல் சமூக சீர்திருத்த இயக்கமாக தமிழக அரசை இயக்குகின்ற எங்களுடைய இயக்கம் திகழ்கிற காரணத்தால், சென்னை மாநகரின் பிரமாண்டமான வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் மாநகர வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றினார்கள் என்பதை சென்னையின் வரலாற்றை எழுதுபவர்கள் பதிவுசெய்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் இந்தியாவிலேயே

முதன்முறையாக குடிசைமாற்று வாரியத் திட்டத்தை கொண்டுவந்து அதனை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தினார்.

5. அதேபோல சென்னையின் கூவம் நதியை தூய்மைப்படுத்தி அழகுபடுத்த வேண்டும் என்கிற எண்ணம் கூட தலைவர் கலைஞர் அவர்களுக்குத்தான் முதன்முதலில் தோன்றியது. இதே ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்றால், வெறும் வரவு செலவு கணக்கு பார்க்கும் அரசாக ஒருபோதும் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு திகழ்ந்ததில்லை. அதற்கு மாறாக சமூக நலத்திட்டங்கள், மனித வள மேம்பாட்டுத் திட்டங்கள், நகரமய மாறுதலுக்கான திட்டங்கள், பெருகும் மக்கள் தொகைக்கேற்ப அவர்களுக்கு வாழ்வாதார வசதிகளை செய்து கொடுக்கும் திட்டங்கள் என மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு ஒவ்வொருமுறை ஆட்சிப் பொறுப்பேற்கும் போதெல்லாம் அடுக்கடுக்கான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

6. கடந்த ஆண்டில் இந்திய நதிகளை இணைக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் நாடு முழுவதும் விவாதம் எழுந்ததை நீங்கள் அறிவீர்கள். அத்தகைய சூழலில் தமிழகத்தில் ஓடும் நதிகளை இணைக்கும் திட்டத்தை தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு தொடங்கி மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது என்பதை இந்தத் தருணத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

7. இந்த திட்டம் மட்டுமல்லாமல் பல முன்மாதிரி திட்டங்களை உருவாக்கிவரும் தமிழக அரசு சென்னை நகர ஆறு பாதுகாப்புத் திட்டத்தை மைய அரசு உதவியோடு செயல்படுத்தி ஆறுகளில் சேரும் கழிவுகளை சுத்திகரித்து மேலும் ஆற்றில் மாசு சேராதவாறு மாசுகளைக் குறைக்கும் பணிகளையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. அது மட்டுமல்லாமல் வெள்ளத் தடுப்புத் திட்டங்களையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. ஆறுகளை தூய்மைப்படுத்தும் திட்டங்களை மேற்கொள்ளும்போது ஆற்றின் கரையில் வாழும் மக்களின் வாழ்வையும் தமிழக அரசு கவனிக்கத் தவறுவதில்லை. ஆற்றின் கரையில் வாழும் மக்கள் சுத்தமான காற்று, அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாத காரணத்தால் அவர்கள் உடல்நலக்கேடுகளுக்கு ஆளாகிறார்கள். எனவே அந்த மக்களை மறு குடியமர்வு செய்யும் அம்சங்களையும் கவனத்தில் கொண்டு சில ஏற்பாடுகளை அரசு செய்துள்ளது. ஆற்றங்கரை ஓர மக்களை மறு குடியமர்வு செய்ய 2009–2010ஆம் ஆண்டுக்கான வீட்டுவதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறையின் மானியக்கோரிக்கையில், “நகரத்தின் வளர்ச்சிக்காக சாலைகள் அலகப்படுத்தப்படுகின்றன, பாலங்கள் கட்டப்படுகின்றன, இத்தருணங்களில் குடிசைப்பகுதிகளை அகற்றப்படுவது தவிர்க்க முடியாததாக உள்ளது. தங்களது குடிசையை இழப்பவர்களுக்கு 20 சதுர மீட்டர் வளர்ச்சி மாற்று உரிமம் வழங்கப்படும்’’ என்று அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின் மூலம் குடிசைவாழ் மக்கள் ஒரு நல்ல இடத்தில் சுகாதாரமான வசதிகளுடன் தங்களின் உறைவிடத்தை அமைத்து கொள்ளும் வாய்ப்பை தமிழக அரசு உருவாக்கித் தந்துள்ளது.

Verified @ RealEstate™

8. அதோடு மட்டுமல்லாமல் கடந்த ஆண்டில் நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடரில் இன்னொரு அறிவிப்பையும் அரசு வெளியிட்டது. பொருளாதாரதில் நலிந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கான வீட்டுவதிகளை பெருக்கிக் கொள்ள சலுகைகளையும் அரசு அறிவித்தது. "அதாவது 50 சதுர மீட்டருக்கும் குறைவாக வீடுகட்டுவோருக்கு சாதாரணமாக அனுமதிக்கப்படும் தரைப்பரப்பு குறியீட்டில் 30 சதவீதம் அதிகமாக வழங்கப்படும். இதேபோன்று, 30 சதுர மீட்டருக்கு குறைவாக வீடுகட்டுவோருக்கு சாதாரணமாக அனுமதிக்கப்படும் தரைப்பரப்பு குறியீட்டில் 50 சதவீதம் அதிகமாக வழங்கப்படும்'' என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்புகளை செயலாக்க, வளர்ச்சி விதிமுறைகளில் திருத்தங்கள் கொண்டுவரவும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புறேன்.

9. இப்படி பலவகைகளில் திட்டங்களை உருவாக்கி, நடைமுறைகளை எளிதாக்கி வருவதோடு சென்னை மாநகரை மேம்படுத்தி தூய்மையாக்குவதன் மூலம் அழகிய சென்னையை உருவாக்க முடிவுசெய்து கூவம் நதியை சுத்தப்படுத்தும் ஒரு மாபெரும் திட்டத்தை தமிழக அரசு தொடங்கியிருக்கிறது என்பதையும் நான் இங்கே நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

10. நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் அண்மைக் காலமாக சென்னை மாநகரில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் உரையாற்றும் போதெல்லாம் கூவம் நதியை தூய்மைப்படுத்த வேண்டும் என்பது குறித்து தனது உள்ளத்து உணர்வுகளை வெளியிட்டு வருகிறார்கள். அந்த உணர்வுகளுக்கு உருவம் கொடுக்கும் வகையில் கூவம் நதியை சீர்படுத்த முயற்சி மேற்கொண்டு உடனடியாக திட்டப்பணிகளை தொடங்குவதற்கும் முடிவு செய்தார்.

11. ஆறுகளில் சீர்கேடு என்பது நமது நாட்டில் மட்டுமல்ல பல்வேறு நாடுகளிலும் அந்த சிக்கல் இருந்து வருகிறது. மேலை நாடுகளில் கூட ஆறுகளைத் தூய்மைப்படுத்தும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகளில்கூட ஆறுகளை தூய்மைப்படுத்தும் பணிகள் நடைபெற்றுள்ளன. இந்த வகையில் சிங்கப்பூரில் ஆறுகளை தூய்மைப்படுத்தும் பணியை அறிந்த நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அங்கே எப்படி இந்தப்பணியை மேற்கொண்டார்கள் என்பதை அறியவிரும்பியதின் அடிப்படையில் உடனடியாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அரசு அலுவலர் குழுவுடன் சிங்கப்பூர் நாட்டிற்குச் சென்று அந்த ஆறுகளின் சீரமைப்புத் திட்டத்தை எப்படி சீர்படுத்தினார்கள் என்பதை கண்டறிந்து வந்துள்ளார். இதனைத் தொடர்ந்து கூவம் நதியை சுத்தப்படுத்தும் நோக்கத்திற்காக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் "Chennai City Waterways Trust" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு உடனடியாக அடிப்படை பணிகளை அரசு தொடங்கி உள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

12. கடந்த நான்காண்டுகளில் அடுக்கடுக்காக பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தலைவர் கலைஞர் அவர்களின் அரசு நிறைவேற்றியது போலவே, கூவம் நதியை சீர்படுத்தும் திட்டத்தையும்

Verified RealEstate ™

வெற்றிகரமாக நிறைவேற்றும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. தமிழக அரசின் திட்டங்களை பிற மாநில அரசுகளும், மத்திய அரசும் பாராட்டுகின்றன. அந்தத் திட்டங்களை தாங்களும் பின்பற்றுவதற்கு முயற்றி எடுத்து வருகின்றன என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புறேன். அது மட்டுமல்ல ஜன நாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவர்களும் தலைவர் கலைஞர் அவர்களின் மக்கள் நலத் திட்டங்களை பாராட்டுகிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைப் பற்றிய நூல் வெளியிட்டு விழா ஒன்றில் “The Hindu” பத்திரிகையின் ஆசிரியர் திரு என். ராம் அவர்கள், தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்களை வெகுவாகப் பாராட்டினார் என்பதையும் இந்தத் தருணத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

13. நடுநிலையோடு கருத்துகளை வெளியிடும் பத்திரிகைகள் அரசியல் கொள்கை ரீதியாக தமிழக அரசை விமர்சிக்கிறார்களே அல்லாமல், அரசு நிறைவேற்றிவரும் திட்டங்களை பற்றியோ அதனை விரைந்து நிறைவேற்றும் நடைமுறைகளைப் பற்றியோ எவராலும் குறை கூற முடியவில்லை என்பது இந்த அரசுக்கு கிடைத்த நற்சான்றிதழ் ஆகும். இந்த வகையில் சிறந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு, ஜனநாயகத்தில் முழுமையாக நம்பிக்கைக் கொண்டு பொதுமக்களின் கருத்தையும் துறைசார்ந்த நிபுணர்களின் கருத்தையும் கேட்டறிந்து திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. எடுத்துக்காட்டாக சொல்லவேண்டுமானால் சென்னை மாநகருக்கான இரண்டாவது முழுமைத்திட்டத்தை மக்கள் கருத்தின் அடிப்படையில் வடிவமைத்து வழங்கியிருக்கிறோம் என்பதைக் குறிப்பிடலாம். அதேபோல சென்னை பெருநகர நீர்வழிகள் குறித்த கருத்துகளையும் நாங்கள் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். இந்த கருத்தரங்கில், சென்னை நீர்வழி அமைப்பு அதன் பயன்பாடுகள் அவற்றை மேம்பாடு செய்யத் தேவையான கருத்துகள் குறித்து விவாதிப்பதுடன், பிற நகரங்களின் நீர்வழிகளையொட்டி வளர்ச்சிகள் பற்றி பிற மாநிலங்களிலிருந்து வல்லுநர்கள் விரிவாக எடுத்துரைக்க உள்ளார்கள். அந்த நிலையில் இந்த கருத்தரங்களில் பங்கேற்கும் அரசுத்துறை அலுவலர்கள், துறைசார்ந்த நிபுணர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் சென்னை மாநகரத்தை மென்மேலும் வளர்ச்சியடையச் செய்யவேண்டுமென்பதில் ஆர்வத்துடன் இயங்கிவரும் பெருமக்கள் இந்த விவாதித்தில் கலந்து கொண்டு தங்களுடைய ஆக்கப்பூர்வமான கருத்துக்களை வழங்கவேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

14. எழிலார்ந்த சென்னையை, தூய்மையான சென்னையை, அழகு மிளிரும் சென்னையை, அயல்நாட்டினர் பார்த்து வியக்கும் சென்னையை, நம்மை வாழவைக்கும் அன்னையான சென்னை மாநகரின் ஆறுகளை தூய்மைப்படுத்தி புதுப்பொலிவுடன் உருவாக்க இந்த கருத்தரங்கம் பயனுள்ள பல வழிமுறைகளைத் தரும் என்ற நம்பிக்கையோடு கருத்தரங்கைத் தொடங்கிவைத்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

*****

Verified RealEstate™